


முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபிக்கு கழக விருதினை வழங்கினார்கள். அதற்கான பாராட்டு விழா நிகழ்வு நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவம் பதித்த 100 ரூபாய் நாணயத்தை நமச்சிவாயத்திற்கு வழங்கினார். உடன் சுப.சீதாராமன், சுப்பிரமணியன், அண்டன் செல்லத்துரை, பெருமாள், விஜிலா சத்யானந்த், அப்துல் கையும் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நெல்லை மாவட்டத்தில் உள்ள இராதாபுரம் கால்வாய் பாசனத்திற்காக கோதையாறு பாசன திட்ட அணைகளில் இருந்து இராதாபுரம் கால்வாய் நிலப்பாறை பகுதியில் இருந்து சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் முன்னிலையில் தண்ணீரை திறந்து வைத்தார். உடன் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. தெற்குவாசல் வில்லாபுரம் பகுதி சார்பில் மாவட்டக் கழக செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர்கள் ஜீவன் ரமேஷ் குமார், போஸ் முத்தையா ஆகியோர் தலைமையில் நடைபெற்றதில் உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள். பெ.குழந்தைவேலு, ஒச்சு பாலு, மூவேந்திரன், உடன் பொன் சேதுராமலிங்கம் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், பகுதி கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில்

# கோட்டைபகுதிச் செயலாளர் கோபிக்குப் பாராட்டு விழா!

## இரா.ஆவுடையப்பன் - சுப.சீதாராமன் வாழ்த்துரை!

நெல்லை.செப்.26-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் “திராவிட மாடல்”ஆட்சியில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபிக்கு கழக விருதினை வழங்கினார்கள். அதனை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பி ரமணியன் தலைமையில்

துணை செயலாளர் அப்துல் கையூம், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)அன்டன் செல்லத்துரை(பாளை) ஆகியோர் முன்னிலையில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயத்திற்கு பாராட்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியை தலைமைக் கழக பேச்சாளர் மைக் மணி தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில சட்ட திட்டக் குழு உறுப்பினர் சுப. சீதாராமன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கழக விருது பெற்ற நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபிக்கு நெல்லை மாநகர தி.மு.க சார்பில் நினைவு பரிசாக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருஉருவம் பதித்த 100 ரூபாய் நாணயத்தை நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் வழங்கினார்.

அதன் பின்னர் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் ஏற்புரை ஆற்றும் போது நான் உள்பட எங்கள் குடும்பத்தினர் அனைவரும் கடைசி இறுதி மூச்சு இருக்கும் வரை கழகத்திற்காக பாடு படுவோம் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி ஜவஹர்,வேங்கை வெங்கடேஷ், நெல்லை பேட்டை பகுதி அவைத்தலைவர் சுப்பையா,வட்ட செயலாளர்கள் மாரி முத்து,லெனின், சடாமுனி, புயல் மீனாட்சி, அருள், காஜா மைதீன், மாமான்ற உறுப்பினர் சுப்பிரமணியன், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் அவதார் ஷாஜகான், சித்திக், சிவா, ஸ்டார் அப்துல், சார்லஸ் முத்து ராஜ், மகாராஜன், செந்தில் குமார், ஜாகிர் உசைன், வைரமணி, நச்சினார் இனியன், பாலன், சிவகுமார், சஞ்சய் குமார், சுப்ரித் சுப்பிரமணியன், இசக்கி முத்து, கிருஷ்ண குமார், நித்தி யானந்தம், ராமநாதன், வீரபாகு, அய்யப்பன், அந்தோணி ராஜ்,வினோத், கோபால், பத்மா, சௌந்திரம், மேரி, பிந்து, ராஜேஸ்வரி, ஆனி, ஜோஸ் வனிதா, நர்மதா, சுப்புலட்சுமி, வதனகுமாரி, சித்ரா, முத்து சுப்பிரமணியன், மணி,சோமு, நாதன், ராமசாமி, வழக்கறிஞர் சங்கர் கணேஷ், தாமிரா கணேசன், சத்யா ஆறுமுகம், லெட்சுமணன், விநாயகம், உசைனி, லாலா குமார், மணிகண்டன், சேர்மன் துரை, கார்த்திக், பீர்ஷா, சாலமோன், ஆவின் ராஜ்குமார், நெல்லை முத்தையா, ராவணன், நயினார், சேதுராமலிங்கம், ராஜகோபால், வேலாயுதம், மில் குமார், ஹாமிம் முஸ்தபா, சேக், ரகுமான் ஷா, அருள்ராஜ், சண்முகராஜா, கபூர், சரவணன், சங்கர் கணேஷ், முருகன், சங்கர், சங்கரநாராயணன், வேல்முருகன், சுரேஷ், ஐயப்பன், கார்த்திக் உள்பட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் 27வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றியுரையாற்றினார்.

# கொடைக்கானல் அனைத்து வன்னியர் சங்கங்களின் பேரமைப்பு பொதுக்குழு!

## சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் சிறப்புரை!

திண்டுக்கல், செப்.26-

கொடைக்கானலில் நேற்று முன்தினம் (24.09. 2024) கோல்டன் பார்க்கில் நடைபெற்ற கொடைக்கானல் அனைத்து வணிகர்கள் சங்கங்களின் பேரமைப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் சிறப்புரையாற்றி பேசியதாவது.

திராவிட மாடல் ஆட்சி நாயகர் நம்முடைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வணிகர்களின் தேவையை அறிந்து செயல்படுகிறார் என பெருமிதமாக பேசிய சட்டமன்ற உறுப்பினர், இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக தமிழகத்தை கொண்டு வருவதற்கு கடுமையாக உழைத்து வருகிறார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பல தொழிற்சாலைகள் தமிழகத்தில் மூடப்பட்டு பல்வேறு மாநிலங்களில் தொழிற்சாலை அமைத்தது. நம்முடைய கழக ஆட்சி அமைந்த உடன் மீண்டும் அந்த தொழிற்சாலைகளை தமிழகத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த மாதம் அமெரிக்க பயணத்தின் போது போடு கார் நிறுவனம் தனது தொழிற்சாலையை மீண்டும் தமிழகத்தில் செயல்படுத்திட அந்நிறுவனத்தின் உயர்நிலை அதிகாரிகளை நேரடியாக சந்தித்து பேசி தொழிற்சாலை செயல்படுவதற்கு தேவையான அனைத்து உதவிகளும் நமது அரசு செய்தி தரும் என்று உறுதி கூறி அந்த நிறுவனம் தொழிற்சாலையை தொடங்க உள்ளது.

நமது கொடைக்கானலை பொருத்த மட்டில் தமிழகத்தில் மட்டுமில்லாத இந்தியாவிலேயே சொல்லக் கூடிய சுற்றுலா தலங்களில் ஒன்று. இங்கு அனைத்து மாநில மற்றும் உலக அளவில் உள்ள மக்களும் சுற்றுலா வருகின்றார்கள் இதனால் அனைத்து தரப்பு வியாபாரிகளும் பயனடைகின்றனர் அதேபோல் கால காலமாக கொடைக்கானலைச் சுற்றியுள்ள மலை கிராம மக்கள் கொடைக்கானலுக்கு வந்து செல்வதற்கு பொது போக்குவரத்து வசதி இல்லாமல் சிரமப்பட்டு வருவதாக என்னிடம் மனு அளித்தனர் அதனை நம்முடைய முதல்வரின் கவனத்திற்கு கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில். கோரிக்கை மனு அளித்தேன்.

அதனைத் தொடர்ந்து முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க நம்முடைய போக்குவரத்து துறை அமைச்சர் புதிய வழித்தடத்தை கடந்த மாதம் கொடைக்கானலில் வந்து தொடங்கி வைத்தார்.

இதுபோல் எந்த ஒரு மக்கள் பிரச்சினையாக இருந்தாலும், வணிகர்களின் பிரச்சனையாக இருந்தாலும், நம்முடைய முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்றால் உடனடியாக தீர்வு வழங்கப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் மண்டல வணிகர் சங்க தலைவர் கிருபாகரன், பழனி வணிகர் சங்க தலைவர் சரவணன், நகரச் செயலாளர் முகமது இப்ராகிம், நகர் மன்ற தலைவர் செல்லத்துரை, துணைத் தலைவர் மாயக்கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் கொடைக்கானல் வணிகர் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

### நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# கழக பவளவிழா - முத்தான 3 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் - தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்புரை!

நெல்லை,செப்.26-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் கழக பவள விழா, திராவிட மாடல். முதலமைச்சர் அவர்களின் முத்தான மூன்றாண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் வருகிற 29 .09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் கூடங்குளம் ஊராட்சி அலுவலகம் ரோகினி மைதானத்தில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் மி.ஜோசப் பெல்சி தலைமையில் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ்,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் லெட்சுமணன், ராஜதுரை, சீனிதாஸ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜான்ஸ் ரூபா,ஒன்றிய கவுன்சிலர் நடராஜன், கூடங்குளம் ஊராட்சி மன்ற தலைவர் வின்சி மணியரசு, மாவட்ட பிரதிநிதி சந்திர சேகர், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ஆனந்த், கூடங்குளம் கிளைச் செயலாளர் பாலசுப்பிரமணியன் என்ற துரை, காந்திநகர் கிளைச் செயலாளர் பரமதாஸ்,எஸ்.எஸ்.புரம்.கிளை செயலாளர் பெரியசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரை யாற்றுகிறார். இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,தலைமை செயற்குழு உறுப்பினரும், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா. ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், எஸ்.ஏ.கே.சித்திக்,கே. கே.சி.பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வெ.நம்பி, மைக்கேல், ப.தமயந்தி, மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜம் ஜான், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில மீனவர் அணி துணை செயலாளர்

எரிக்ஜூடு, பொதுக்குழு உறுப்பினர்கள் கணேசன், பரமசிவம் ஐயப்பன், கனகராஜ், அபூபக்கர், ராமச்சந்திரன், சாந்தி சுபாஷ், எட்வின் வலன்அரசு, ஒன்றியச் செயலாளர்கள் தங்கபாண்டியன், ராஜன், ராஜா ஞான திரவியம், ஆரோக்கிய எட்வின், போர்வெல் கணேசன், கண்ணன், சுடலைக் கண்ணு, செல்வ கருணாநிதி, முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துகிருஷ்ணன், பரணி சேகர் நகர செயலாளர்கள் மணிசூரியன், கணேசன் உள்பட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள்,

மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஊரக, உள்ளாட்சி பிரதிநிதிகள், இராதாபுரம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள், கூடங்குளம் ஊராட்சி கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எஸ். பி.எஸ்.பிரபாகரன் நன்றி உரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணியினர் செய்துள்ளனர்.



கொடைக்கானல் கோல்டன் பார்க்கில் கொடைக்கானல் அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பொதுக்குழு நேற்று முன்தினம் (24.09.2024) நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் கொடைக்கானல் நகர செயலாளர் முகமது இப்ராஹிம், நகர் மன்ற தலைவர் செல்லத்துரை, துணைத்தலைவர் மாயக்கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் வணிக சங்கங்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட பாம்பனைச் சேர்ந்த 32 மீனவர்களின் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து ஒவ்வொருவருக்கும் வாழ்வாதாரத்திற்காக தனது சொந்த நிதியினை அளித்தார். உடன் மீனவர் அணி அமைப்பினர், ராமேஸ்வரம் நகர் மன்றத் தலைவர் நாசர்கான் உட்பட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஆங்கூர்ராவுத்தர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் கம்பம் முத்தையாபிள்ளை நினைவு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் கம்பம் வடக்கு நகரச் செயலாளர் வீரபாண்டியன், தெற்கு நகரச் செயலாளர் பால்பாண்டிராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குருகுமரன், வடக்கு தெற்கு நகர வார்டு செயலாளர்கள், நகர வார்டு நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் வடக்கு தெற்கு மாவட்ட விவசாய அணி உறுப்பினர் கூட்டம் விருதுநகரில் தொ.மு.சா. போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.சீனிவாசன், விவசாய அணி தெற்கு மண்டல அமைப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம், புதிய உறுப்பினர் சேர்க்கை படிவங்களை வழங்கினார்கள். உடன் நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ் தனபாலன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன், விவசாய அணி துணை அமைப்பாளர் நேஷனல் ராமர், அச்சம்மாள் பெருமாள்சாமி, சசிகுமார், மு.க.பாண்டி, தனுஷ் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், போக்குவரத்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் ராஜ செல்வம் , தெற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பாலச்சந்தர், நகர துணை செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி திருமாறன் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.